**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 106/2022** **நாள்.24.11.2023**

2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 நாள் வாதி தரப்பு 3 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஏழுமலை | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஆதிமுத்துபிள்ளை | சாதி | |
| கிராமம் | பரதன்தாங்கல் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 70 |

**வ.சா.3**

**குறுக்கு விசாரணை**

தாவா புரோநோட்டை நான் தான் எழுதினேன். முதல் சாட்சி கையெழுத்து வெங்கடேசன் என்பவர் போட்டார். 2 வது சாட்சி கையெழுத்தை நான் தான் போட்டேன். தாவா புரோநோட்டில் 2 ஸ்டேம்ப் ஒட்டப்பட்டிருந்தது. பிரதிவாதி நாராயணசாமி தாவா புரோநோட்டில் எத்தனை கையெழுத்து போட்டார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. தாவா பாண்டு அச்சடிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதாகும். தாவா பாண்டு காலை 8 முதல் 8.30 மணிக்கு எழுதினேன். தாவா பாண்டை எழுதுமாறு பிரதிவாதி தான் என்னை அழைத்து வந்தார். 18.11.2020 தேதியில் பிரதிவாதியை ஆலம்பூண்டி கிரமத்தில் பார்த்தேன். தாவா புரோநோட்டு வாதி வீட்டில் வைத்து எழுதப்பட்டது. வாதி ரூ.2 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்ததை நான் நேரில் பார்த்தேன். ஆலம்பூண்டியில் உள்ள சீதாராமன் முதலியார் ,தணிகாசலம் ஆகியோர்கள் உள்ளார்களா என்று எனக்கு தெரியாது. தணிகாசலத்திற்கு செஞ்சியில் உள்ள அலுவலகத்தில் வைத்து பிரதிவாதி பாண்டில் உள்ள கையெழுத்தை மட்டும் போட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி கையெழுத்து போடும் போது 1 வது சாட்சி கையெழுத்து போட்டுள்ள வெங்கடேசன் அங்கு இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.